# ஆசிரியர் மடல்



2026 புதிய ஆண்டின் வாழ்த்துகளை வளன் ஒளி இதழ் வழியாகவும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி கொள்கிறேன். புனித சூசையப்பரின் பரிந்துரையிலும், பாதுகாவலிலும் சென்ற ஆண்டு இறைவன் நமக்குச் செய்த நன்மைகளுக்கு நன்றி கூறி புதிய ஆண்டின் நலன்களை எதிர்நோக்கோடு வரவேற்போம். கடந்த ஜூபிலி ஆண்டில் நமது பங்கில் நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகளிலும், தாராளமாக உதவும் மனப்பான்மையிலும் இறைமக்கள் அனைவரின் பங்கேற்பும் பாராட்டுக்குரிய விதத்தில் இருந்தது. நம் பங்கின் ஒவ்வொரு இயக்கமும், சபையும் வெகு ஆர்வமுடன் இவற்றில் ஈடுபட்டது மனநிறைவைத் தந்தது. நமது பங்கின் வளர்ச்சியில் தொடர்ந்து தோள்கொடுத்து உதவ உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அன்பியக் கூட்டங்களில் ஆர்வமுடன் கலந்துகொள்ளும் இறைமக்களை வாழ்த்துவதுடன், அவர்களை வழிநடத்தும் அன்பியப் பொறுப்பாளர்களையும் பாராட்டுகிறேன். அன்பியக் கூட்டமானது இறைச்சமூகத்துக்குள் ஒன்றிப்பை வளர்ப்பதுடன், ஒற்றுமையை பலப்படுத்தவும் செய்கிறது. அன்பியக் கூட்டங்களில் இளைஞர்களும் ஆர்வமுடன் பங்கேற்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். குடும்ப உறுப்பினர்கள் அனைவருமே இணைந்து ஒரே இறைவனின் மக்களாக அவர் திருமுன்னிலையில் வளர்ச்சி காண்பது என்பது எவ்வளவு மகிழ்ச்சிக்குரிய விஷயம்! நம் வளன் ஒளி இதழில் வெளியாகும் விவிலிய வினா–விடைப் போட்டிகளில் தவறாமல் பங்கேற்பவர்களை பாராட்டுவதுடன், விவிலியம் வாசிக்கக் கிடைத்த இந்த நல்வாய்ப்பைப் பயன்படுத்தி இறைவார்த்தைகளை அறிந்துகொள்ளும் ஆவலுடன் போட்டிகளில் இறைமக்கள் கலந்து கொள்ள வேண்டுகோள் விடுக்கிறேன்.

பொங்கல் திருநாளில் நம் ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியில் பங்கேற்று இறைவனுக்கும் அவர் படைத்த இயற்கைக்கும் நன்றி கூறுவோம். கலைநிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு உழவர் பெருநாளின் மகிழ்ச்சியில் பங்கேற்போம்.

இவ்வாண்டு பிப்ரவரி 18 அன்று திருநீற்றுப் புதனிலிருந்து தவக்காலம் துவங்குகிறது. மனத்தூய்மையுடன் தவக்கால திருவழிபாட்டு நிகழ்வுகளில் பங்கேற்பதோடு, செபம், தவம், தர்மம் ஆகிய நற்செயல்களில் ஈடுபடுவது தவக்காலத்தை பயனுள்ளதாக ஆக்கும். அடுத்தவரை ஏற்றுக்கொள்வது, ஆகாதவரை மன்னிப்பது என அமைதியான மனநிலையை தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்ள முயற்சிக்கவும். ஒப்புரவு அருட்சாதனம் பெற்றவர்களாய், அன்றாடம் திருப்பலியில் கலந்துகொண்டு நற்கருணை பெற்றுக்கொள்ள முன்வரவும். இந்த தவக்காலத்தில் திவ்விய நற்கருணை சந்திப்பில் ஆர்வத்தோடு பங்கேற்க கேட்டுக்கொள்கிறேன்.

மார்ச் மாதத்தில் **இரட்சகர் சபை குருக்கள்** வழிநடத்தும் ஒரு வார **தவக்கால தியானம்** ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அனைத்து மக்களும் தியானத்தில் தவறாமல் பங்கேற்க வேண்டுகிறேன். புனித சூசையப்பரை மார்ச் 19 அன்று திருச்சபை நினைவுகூர்ந்து கொண்டாடுகிறது. நம் பங்கின் பாதுகாவலரான நமது புனிதர் வழியாக ஆலயத்தின் வளர்ச்சியிலும், குடும்பங்களின் முன்னேற்றத்திலும் அடைந்த நலன்களுக்காக நன்றி கூறுவோம்.

மார்ச் மாதத்தில் ஆண்டுத் தேர்வுகள் துவங்கவுள்ளன. மாணவச் செல்வங்கள் நல்ல குறிக்கோளோடு கல்வியில் கவனம் செலுத்தி தேர்வுகளில் வெற்றி பெற்று ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி நடைபோட வாழ்த்துகிறேன்.

இறைமக்கள் அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் விழா நல்வாழ்த்துகள் உரித்தாகுக!

பாசமுடன்

அருட்பணி. **தாமஸ் பிரேம்குமார்** பங்குத்தந்தை

அருட்பணி. **டேவிட் மதிவாணன்** உதவி பங்குத்தந்தை



I am delighted to convey my New Year 2026 greetings to you through the Valan Oli magazine. As we welcome the New Year with hope, let us thank God for all the blessings He bestowed upon us in the past year through the intercession and protection of St. Joseph.

During the Jubilee Year, the participation of all the faithful in the various parish activities and your generous spirit of support were truly commendable. Every association and movement of our parish took part with great enthusiasm, which brought much joy and satisfaction. I lovingly request you to continue extending your wholehearted cooperation for the ongoing growth of our parish.

I congratulate all the faithful who actively participate in the Anbiyam meetings and appreciate the Anbiyam leaders who guide them. Anbiyam meetings help to foster unity within the Christian community and strengthen mutual bonding. I also encourage our youth to take part enthusiastically in these meetings. How joyful it is when all members of a family grow together as children of one God in His presence!

I appreciate those who regularly participate in the Bible Quiz competitions published in Valan Oli magazine. I urge all the faithful to make use of this wonderful opportunity to read the Bible and participate in the competitions with eagerness to know God's Word more deeply.

Let us participate in the Holy Mass celebrated in our church on the occasion of the Pongal festival and thank God and His creation. Let us also join the cultural programmes and share in the joy of this harvest festival.

This year, the Lenten season begins on Wednesday, February 18, with Ash Wednesday. Participating in Lenten liturgical celebrations with purity of heart, and engaging in prayer, fasting, and charity will make the season fruitful. I encourage each one to cultivate inner peace by accepting others and forgiving those who have hurt us. I invite you to receive the Sacrament of Confession, participate daily in the Holy Mass, and receive the Holy Eucharist. I also request you to take part enthusiastically in the Eucharistic Adoration during this Lenten season. In the month of March, a one-week **Lenten Retreat** led by the priests of the 'Ratchagar Sabai' has been arranged. I request all the faithful to participate without fail.

On March 19, the Church celebrates the feast of St. Joseph. Let us thank God for the blessings received through our patron saint, St. Joseph, in the growth of our church and the progress of our families.

Annual examinations will begin in March. I wish our dear students success as they focus on their studies with determination, excel in their examinations, and walk towards a bright and promising future.

May New Year and Pongal festival greetings be granted to all the faithful!

*Lovingly,*

**Fr. Thomas Premkumar**
Parish Priest

**Fr. David Madhivanan**
Asst.Parish Priest

## வீரமாமுனிவரின் சூசை மாமுனி காப்பியம்

– ரோனா ஆல்பர்ட்



கிறிஸ்தவ சமயத்தின் கலைக்களஞ்சியம் என்று போற்றப்படும் தேம்பாவணி காப்பிய நூலில் அதனை இயற்றிய வீரமாமுனிவரே புனித சூசையப்பருக்கான வளனார் என்ற சிறப்புப் பெயரை முதன் முதலில் அறிமுகப்படுத்தினார். இது பாட்டுடைத் தலைவராக சூசையப்பரைக் கொண்டு அவருடைய வாழ்க்கை வரலாற்றை கவிதை வடிவில் கூறும் நூலாகும். இந்நூல் தமிழ் இலக்கியத்தின் தலை சிறந்ததும், இந்திய மொழியில் எழுதப்பட்ட கிறிஸ்தவ இலக்கியத்தில் குறிப்பிடத்தக்க படைப்பாகவும் கருதப்படுகிறது. தமிழில் அமைந்த காப்பியங்களிலேயே தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத வெளி நாட்டவர் ஒருவரால் இயற்றப்பட்ட முதல் நூல் என்ற பெருமை தேம்பாவணிக்கே உள்ளது. தமிழ் மொழியின் செழுமையையும், அதன் கவிதை மரபுகளையும் பாங்குற வெளிப்படுத்தும் இந்நூல் 3 பெரும் பிரிவுகள் (காண்டம்), 36 உட்பிரிவுகள் (படலம்), 3615 பாடல்களை(விருத்தப்பா) கொண்டுள்ளது. இறைமகன் இயேசுவின் பூமிக்குரிய தந்தையாகிய புனித சூசையப்பரின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்க்கையை உள்ளடக்கியது. இந்நூல் இயற்றப்படக்காரணம் இயேசுவின் வளர்ப்புத்தந்தை சூசையப்பரின் பெருமைகளைப் பாடி கத்தோலிக்க சமயத்தைப் பரப்புவதுடன், தமிழ் இலக்கிய வளத்தை மேம்படுத்துவதுமாகும்.

### காப்பியத் தலைவர் சூசையப்பர்

தேம்பாவணியில் சூசையப்பர்(சூசை,வளன்) காப்பியத் தலைவனாக இருந்த போதிலும், அன்னை மரியா மற்றும் இயேசுவின் வரலாறும் பின்னிப் பிணைந்துள்ளது. விவிலியத்தில் வருகின்ற 150–க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளை உள்ளடக்கி இருக்கிறது. இந்நூல் சூசையப்பர் பிறப்பில் தொடங்குகிறது. இறைவனுடைய தலையீட்டின் மூலம், இறைமகனைக் கருத்தாங்கிய கன்னி மரியாவை மனப்போராட்டங்களுக்குப் பின்னர் மணக்கிறார். இயேசு பிறப்பெடுக்கிறார். திருக்குடும்பம் நாசரேத் வந்து அங்கு சில ஆண்டுகள் வாழ்கின்றனர். தச்சராக உழைத்தவர் முதுமையினால் நோய்வாய்ப்படுகிறார். துயர்களை பொறுமையோடு தாங்கிக் கொள்கிறார். மனைவி மரியாவும், மகன் இயேசுவும் அருகிருக்க உயிர் துறக்கிறார். சூசையப்பரின் வாழ்வை விவரிக்கும் இந்நூல், விண்ணக மகிமையில் மூவொரு இறைவனால் வளனாருக்கு முடிசூட்டுவதுடன் நிறைவுறுகிறது.

தேம்பாவணி காப்பியம் மூலம் சூசையப்பருக்கு புகழ்மாலை சூட்டும் வீரமாமுனிவர், அவரை வளன் சூசை, பூங்கொடியோன், மறையோன், மாதவன், மாட்சியோன், முனிவன், வாகையான் என்றெல்லாம் பாடிச் சிறப்பிக்கிறார். இவ்வுலகில் மரியாவையும், இயேசுவையும் அன்போடு பாதுகாத்து, வளர்த்து, கடவுளின் திட்டத்தை விருப்புடன் நிறைவேற்றினார் என்பதே அவருக்கு இறைவன் அளித்த மாட்சிக்கான அடிப்படை என்று வீரமா முனிவர் பல இடங்களில் சூசையப்பரைப் பாராட்டி மகிழ்கிறார்.

**வீரமா முனிவரின் புதிய யுக்தி**

இயேசு தம் பொதுவாழ்வைத் தொடங்குவதற்கு முன்பே சூசையப்பர் இறந்து விடுகிறார் என்பதால், இயேசுவின் நற்செய்திப் பணிகள், அவரது சிலுவை மரணம், உயிர்த்தெழுதல் போன்றவற்றை நேரடியாக எடுத்துரைக்கும் வாய்ப்பு சூசையப்பரின் இந்த வாழ்க்கை நூலில் அமையவில்லை. எனினும், தேம்பாவணியின் பாட்டுடைத் தலைவரான சூசையப்பரோடு இயேசுவின் வாழ்க்கை நிகழ்வுகளை தொடர்புபடுத்திட வீரமாமுனிவர்ஒரு புதிய யுக்தியைக் கையாள்கிறார். அதாவது, சூசையப்பர் தம் இறப்பிற்குப் பிறகு விண்ணகம் சென்றிட, அங்கு இயேசு வருங்காலத்தில் என்னென்ன போதனைகளை அறிவிப்பார், எவ்வாறு இறப்பார் என்ற செய்திகள் கடவுளால் முன்னரே அங்கே அவருக்கு அறிவிக்கப்படுவதாகவும், அச்செய்திகளை விண்ணகத்தில் உள்ளோரிடம் சூசையப்பர் தாமே எடுத்துக் கூறுவதாகவும் வீரமாமுனிவர் தம் காப்பியத்தில் பதிவிடுகிறார்.

**சில எடுத்துக்காட்டுகள்**

விண்ணக மாந்தரிடம் சூசையப்பர், தன் மைந்தர் இயேசுவின் பணியை விவரிக்கும்போது (பாடல்3376), இயேசு நோய்வாய்ப்பட்டவர்க்கு இன்பம் கூர்ந்த உயிர் தரும் மருந்துக்கு ஒப்பாவார்; நெருப்பைப் போன்ற பாவங்களைக் கொண்டுள்ளவர்க்கு குளிர்ச்சி பொருந்திய மழைக்கு ஒப்பாவார்; தன் உள்ளத்தின் அமைப்பால் மலருக்கு ஒப்பாவார்; பரந்த இரக்கத்தால் கடலுக்கு ஒப்பாவார்; உலகத்தார் அனைவருக்கும் தாயும் தந்தையும் போலாவார் என்று பாராட்டி மகிழ்கிறார்.

இயேசு பாவ இருள் விலகுமாறு விண்மீனைப் போன்று ஒளிரும் கண்களைக் கொண்டவர், திருமறையை மணம் பொருந்த எடுத்துக் கூறும் வண்ணம் மணம் கமழும் தாமரை மலர் போன்ற வாய் கொண்டவர், துயரத்தின் கசப்பை ஒழிக்கும் தேன் போன்று இனிதான சொல்லைக் கொண்டவர், தன் அழகை எடுத்துக்காட்ட வானம் போல மலர்ந்த முகம் கொண்டவர் என்று இயேசுவின் கண்கள், வாய், முகம் ஆகியவற்றின் எழிலை விண்ணகத்தாரிடம் வருணிக்கிறார் (பாடல் 3377).

வீரமா முனிவர் தமிழ் இலக்கியம் தவிர இசையிலும் தேர்ந்தவர் என்பதை பல பாடல்கள் இயம்புகின்றன. எடுத்துக்காட்டாக சூசையப்பர் விண்ணகம் சென்றபோது வானவர் அடைந்த மகிழ்ச்சி ஆரவாரத்தை ஒலிக்குறிப்புகளோடு விவரிக்கிறார். மொட மொடவென்று பலவகை முரசுகள், பறைகளின் ஒலியுமாக இசைக்கருவிகள் அதிர்ந்து முழங்கின. நெடநெடவென்று கைகளில் கொண்டுள்ள குழல்களின் பாடலும், வீணைகளின் இசையும் ஒருங்கிணைந்த ஓசை கலந்து இனிமையூட்டின. படபடவென்று மேகத்தின் இடி முழக்கமும், கடல் அலையோசையும் தம் பெருமை இழந்தன. விடவிடவென்று வெளிசூழ்ந்த வானுலகிலும், கடல் சூழ்ந்த மண்ணுலகிலும் வீரம் சிறந்த ஓசையாக மயங்கி எழுந்தன (பாடல் 3470).

தம்மை வளர்த்து ஆளாக்கிய சூசையப்பர் மண்ணுலகில் இறைவனுக்கு உகந்தவராக வாழ்ந்து சிறப்புப் பெற்றமையால் அவருக்கு விண்ணக மகிழ்ச்சியில் பங்களித்து அவரை மாட்சிப்படுத்த வேண்டும் என்று இறைத் தந்தையிடம் இயேசு வேண்டுகின்றார். முழுமுதல் கடவுளாகிய தந்தையும் அவ்வாறே சூசையப்பருக்கு மணிமுடி சூட்டுகின்றார். தேம்பாவணியின் 3510-ஆம் பாடலில் இக்காட்சியை வீரமாமுனிவர் சுவைபட விவரிக்கின்றார். மேலும் 3511 மற்றும் 3512-ஆம் பாடல்களில் முறையே மகனாகிய இயேசுவும், தூய ஆவியாருமே சூசையப்பருக்கு முடிகளைச் சூட்டியதாக வீரமாமுனிவர் போற்றிப்பாடுகிறார்.

**தேம்பாவணியின் சிறப்பு**

இயேசுவின் வளர்ப்புத்தந்தை சூசையப்பர் பெருமைகள் பாடப்படுவதுடன் நாடு, நகரத்தின் சிறப்புகள், அறக்கருத்துகள், இலக்கிய நயம் ஆகியவற்றை சூசையப்பரின் வாழ்வில் பொருத்தி சிறந்த நடையில் எழுதப்பட்டுள்ளது. தமிழில் ஒரு சிறந்த காவியம் படைக்க ஆவல் கொண்ட வீரமாமுனிவரால், சூசையப்பரை மையமாகக் கொண்டு தமிழ் மரபுக்கேற்ப விவிலியத்தின் முக்கிய நிகழ்வுகளை விளக்கவும், சூசையப்பரின் வாழ்வைப் போற்றவும் படைக்கப்பட்டுள்ளது. இயற்கைச் சூழல், இறைவனின் தோற்றம், இல்லறம் மற்றும் துறவறத்தின் மாட்சி, உழைப்பின் மேன்மை, வறுமையில் செழுமை, கற்பின் பெருமை, கடவுளின் இலக்கணம், பாவத்தின் கொடுமை, அறத்தின் மேன்மை இவற்றை விளக்கும் நீதிநூலாக விளங்குகிறது. இந்நூல் புனித வளனாரைப் புகழ்வதன் வழியாக இறைவனைப் போற்றும் ஈடு இணையில்லா நூலாகத் திகழ்கிறது.

**தவக்கால சிறப்பு குடும்ப தியானம்**

நாள் : **மார்ச் 22 முதல் 29 முடிய**

நேரம் : **மாலை 06.00 மணி முதல் 08.30 மணி வரை**

வழி நடத்துபவர்கள் : **இரட்சகர் சபை குருக்கள்**



இறை மக்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு இறை இயேசுவில் ஒன்றித்து மனமாற்றத்தோடு அவரின் திருப்பாடுகளை தியானிக்க கேட்டுக் கொள்கிறேன்.



**அருட்பணி. தாமஸ் பிரேம்குமார்,**
பங்குத்தந்தை

## Innocents Suffer - Why?

### Why Does God Allow the Innocent to Suffer?

Every believer, at some point, confronts a question that pierces both heart and mind: If God is good and all-powerful, why does He allow the innocent to suffer? We ask it when children are caught in war, when disease takes the righteous too soon, when disasters destroy lives without reason. We ask it when tragedy strikes close to home when prayer seems unanswered and faith feels shaken. This question cannot be brushed aside with easy explanations.

Scripture itself gives voice to this struggle. The book of Job tells of a man described as "blameless and upright," yet who loses everything without cause. Job's friends offer explanations sin, punishment, hidden fault but none bring peace. Job's anguished cry of "Why?" remains unanswered in words. Instead, God responds with revelation, reminding Job that divine wisdom and justice reach far beyond human sight.

For centuries, philosophers and theologians have wrestled with what is often framed as a logical puzzle: If God is all-powerful, He could prevent suffering. If God is all-good, He would want to prevent it. Yet suffering exists. The Christian tradition does not deny this tension. Rather, it affirms that God is both omnipotent and perfectly good, and that suffering points toward deeper truths about love, freedom, and divine justice.

### The Gift and Risk of Freedom

St. Augustine of Hippo, who once rejected Christianity because of this very question, came to understand that evil is not something God created. Evil, he taught, is the absence of good - the shadow that appears when God's light is refused. Everything God created is good; distortion enters when His creatures turn away from that goodness.

At the heart of this mystery lies free will. God did not create humanity as puppets, but as persons capable of choosing. For love to be real, it must be free. A world without freedom would also be a world without love, courage, or virtue only mechanical obedience. Yet freedom carries risk. Acts of cruelty, greed, and violence arise from misused human will. Much of the world's suffering, then, is not the will of God, but the consequence of choices made against His love.

Still, not all suffering can be traced to moral evil. Illness, natural disasters, and sudden loss confront even the righteous. Here, St. Thomas Aquinas offers a vital insight: God permits evil only so that a greater good may come from it.

### The Greater Good Hidden in Suffering

The Gospel offers a glimpse of this truth in John 9. When the disciples encountered a man born blind, they asked Jesus, "Rabbi, who sinned, this man or his parents, that he was born blind?" Jesus replied, "Neither this man nor his parents sinned, but this happened so that the works of God might be displayed in him." His suffering was not punishment, but a setting in which God's mercy could be revealed.

This mystery is most fully revealed at the Cross. The crucifixion of Christ is history's greatest injustice: the sinless condemned, the innocent slain. Yet through that suffering came redemption for all humanity. What appeared to be defeat became the triumph of divine love. The darkest moment of history became the source of eternal light.

This pattern echoes throughout human experience. Suffering, while never good in itself, can be transformed when united with God's purpose. We see it in grief that gives birth to compassion,

in communities strengthened by tragedy, in faith purified through trial. In this way, suffering becomes the soil in which grace can grow.

**The Justice and Wisdom of God**

God's justice does not always unfold within our timelines or in ways we immediately recognize. We see only fragments; God sees the whole. St. Paul writes in Romans 8:28, "We know that in all things God works for the good of those who love Him." He does not say that all things are good, but that God works good through all things.

Jesus Himself tells us, "In this world you will have trouble. But take heart! I have overcome the world" (John 16:33). Even Christ cried out on the Cross, "My God, why have You forsaken Me?" He entered human suffering fully not to explain it from a distance, but to redeem it from within.

In the end, faith does not silence the question of suffering; it transforms it. Instead of asking only, "Why is this happening?" faith learns to ask, "How can God's goodness work through this?" Our faith does not promise a life without pain, but it assures us that no pain is ever meaningless in God's hands. If we look to the Cross, we see God's answer to suffering: not abandonment, but love -a love that suffers with us, redeems us, and ultimately makes all things new.

**Mr. Gerald,**
St. Yovaan Anbium

## Kids corner
## Young artists

We invite our young artists to display their talents.
Make beautiful drawings on the topics given.
Submit your entries on or before 24.02.2026.
Hand over your entries to the Assistant Parish Priest
or your catechism teachers.

**TOPICS**
EPIPHANY
LENT
EASTER

NOTE
PLEASE REMEMBER TO MENTION
YOUR NAME AND THE CLASS YOU STUDY IN
CONTACT NUMBER
NAME OF YOUR ANBIYAM





# புனித தேவசகாயம் மறைச்சாட்சி

தென்திருவிதாங்கூர் பத்மனாபபுரத்துக்கு அருகில் நட்டாலம் என்ற ஊரில் 1712–ம் ஆண்டு பிறந்த நீலகண்டம்பிள்ளை நன்கு கல்வி பயின்றவர். தமிழ், சமஸ்கிருதம், மலையாள மொழிகளில் புலமையும், தத்துவம் இறையியல், இலக்கணம் இவற்றிலும், புராணத்தை மனப்பாடமாக ஒப்புவித்தலிலும், சண்டைப் பயிற்சிகளிலும் திறமை மிகுந்து விளங்கினார். திருவிதாங்கூர் மன்னன் மார்த்தாண்டவர்மன் அரசில் கருவூல அதிகாரியாகப் பணியாற்றினார். உரிய காலத்தில் துவங்கிய இல்லற வாழ்வின் மகிழ்ச்சி, திடீரென குடும்பத்தில் நடந்த எதிர்பாராத துயர நிகழ்வுகளால் மாறிற்று. ஆடு மாடுகள், பயிர்ப்பொருட்கள், பணம் என எல்லாமே நட்டமாயின. குடும்பத்தில் பலரும் உடல்நலம் குன்றிப்போயினர். இந்நிலையில் பத்மனாபபுரத்தில் கோட்டை கட்டும் பணியைக் கவனித்த நீலகண்டம், நான்காண்டுமுன் நடைபெற்ற குளச்சல் போரில் சிறைப்பிடிக்கப்பட்ட டச்சு நாட்டுத் தளபதி டிலனாய் என்பாரைச் சந்தித்து அடிக்கடி பேசிப்பழக, ஒருநாள் நீலகண்டத்தின் குடும்பத்தில் நிகழ்ந்த துயர நிகழ்வுகளை கேட்டு வருந்திய டிலனாய் அவரைத் தைரியப்படுத்தி பைபிளில் உள்ள யோபுவின் வரலாற்றை அவருக்குக் கூறக்கூற நீலகண்டத்தின் மனம் இலேசானது.

1745 மே மாதம் நீலகண்டம், லாசரஸ் அதாவது தேவசகாயம் என்ற பெயரோடு கிறிஸ்தவ திருமறையில் இணைந்தார். (பின்னாளில் அவர் மனைவியும் இணைந்தார்) இதனால் உறவுகள் எதிர்ப்பு வலுத்தது. அமைச்சன் இராமய்யன் தளவாய் மன்னனிடம் புகார் கூற, திருமறையைப்புறக்கணிக்க வற்புறுத்தப்பட்டு, மறுத்தவரை சிறையில் அடைத்தான். சிறையில் அவர் விசுவாசத்தை சீர்குலைக்க முயன்றும் அசைந்து கொடுக்காதவரை குளுமைக்காட்டில் தலையை வெட்டிக் கொல்ல உத்தரவிட்டான். தாம் எப்படியும் சிரச்சேதம் செய்யப்படுவோம் என்பதை உணர்ந்த தேவசகாயம். அது எப்போது என்பதைத்தான் அறியாதிருந்தார். அவருக்கு நேர்ந்த தெல்லாம் அதிகப்படியான அவமானங்களே.

அவர் கால்களில் சங்கிலியோடு இரு கரங்களையும் பின்னால் சேர்த்துக் கட்டி எருக்கம்பூ மாலை அணிவித்து குளுமைக்காட்டை நோக்கி ஊர்வலமாகக் கொண்டு சென்றனர். வழியில் நின்றிருந்தோரில் சிலர் அவரை ஆபாசமாகத் திட்டிப் பரிகசித்தனர். வீரர்கள் அவரை அடிக்கவும், காலால் மிதிக்கவும் தள்ளிவிடவும் செய்து பலவகைகளில் கொடுமைப்படுத்திக் கூட்டிச் சென்றனர். குளுமைக்காட்டை நெருங்கும் முன் இப்போதைக்கு சிரச்சேதம் வேண்டாம் என்று மன்னன் உத்தரவிட, 'என் கடவுளே, நான் இன்று இந்தப் பாக்கியம் பெறத் தகுதியில்லை என்று எண்ணியா மீண்டும் சிறைக்கு அனுப்புகிறீர்?' என்று கூறி வருந்தினார்.

சிறைக்குள் இருந்தாலும் அவ்வப்போது எருக்கம்பூ மாலை அணிவித்து எருமைமேல் அமர்த்தி ஒவ்வொரு கிராமத்திலும், சந்தைகள் கூடும் இடங்களிலும், கடைத்தெருக்களிலும் அவரை அழைத்து சென்று நிறுத்தி அவமானப்படுத்தினர். தினமும் முப்பது பிரம்படிகளும், அடிகளினால் ஏற்படும் காயங்களில் மிளகு அரைத்துப் பூசியும் அவரை வெயிலில் வைத்து வாட்டி வதைத்தனர். இத்தனை கொடுமையிலும் 'ஐயோ' என்ற சொல்லை அவர் மறந்தும் உச்சரிக்கவில்லை.

சிறையில் அவரைக் காணவரும் மக்கள் கூட்டத்தைத் தடுக்க, கைதிகளைத்

தூக்கிலிடுகின்ற ஆரச்சார் என்பவன் தங்கியிருந்த பெருவிளை என்ற கிராமத்துக்கு அவர் கொண்டு போகப்பட்டு அவன் வீட்டு மாட்டுத்தொழுவத்துக்கு அருகில் ஒரு வேப்ப மரத்தில் கட்டி வைத்து குடிக்கத் தண்ணீர்கூட தராமல் ஏழு மாதங்கள் துன்புறுத்தினர். அங்கேயும் மக்கள் தேடிவந்து அவரின் செபத்தைக் கேட்டனர். மணமாகி குழந்தைப்பேறு இல்லாத ஆரச்சார், தன் மனக்குறையை அவரிடம் சொல்ல, சிறிது காலத்தில் அவனுக்கு ஓர் ஆண்மகன் பிறப்பான் என அவர் வாக்குரைக்க அப்படியே ஆரச்சாரின் மனைவி மகப்பேற்றின் அடையாளங்களை தன்னில் உணர்ந்தாள். தேவசகாயம் மீது ஆரச்சாரின் நம்பிக்கை அதிகமாயிற்று. இந்நிலையில் மக்கள் யாரும் அவரை நெருங்காதபடிக்கு ஆரல்வாய்மொழி அழைத்துச் சென்று கொடுமைப்படுத்தினர்.

தாம் இறப்பதற்கு முன்தினம் தம்மைத் தேடிவந்த நோயாளிகளை கடவுளின் அருளால் குணப்படுத்திய அவர் மக்களிடம் இறுதியாகப் பேசினார் 'நாளை இங்கு ஒரு சிறப்பான நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இன்றும் நாளையும் நீங்கள் யாரும் இங்கு வராதிருந்தால் நலமாக இருக்கும்' என்று கூறி அவர்களை அனுப்பி வைத்ததோடு அன்று தமது செபம், தியானத்துக்கு தடை ஏற்படாதவாறு பார்த்துக் கொண்டார். மறுநாள் வெள்ளிக்கிழமை காலையிலேயே தேவசகாயத்தை அரசன் உத்தரவுப்படி ஆரல்வாய்மொழியிலிருந்து காற்றாடிமலை நோக்கி அழைத்துச் சென்றனர். கைகால்களில் சங்கிலி பிணையுண்ட அவரால் நடக்க முடியாது போக, அவருடலில் சரமாரி அடிகள் விழுந்தன. எனினும் புன்னகைத்த முகத்தோடு அவரைக் கண்ட வீரர்கள் சினத்துடன் 'நாங்கள் எதற்காக உன்னைக் கூட்டிப் போகிறோம் என்பதை அறியவில்லையா?' என்று கேட்க, அவரும் 'என்னைக் கொலை செய்யத்தான் கூட்டிப் போகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். இந்த நாளுக்காகத்தான் நான் ஆவலோடு காத்திருந்தேன்' என்று கூற வீரர்களின் கோபம் வியப்பானது.

காலில் சங்கிலி மாட்டியிருந்த அவரால் விரைந்து நடக்க முடியாமல் போக, கைகால்களின் சங்கிலி வளையங்களுக்குள் இரும்புக் கம்பியிட்டு மலையடிவாரம் தூக்கிச் சென்றனர். அங்கே செபிக்க அனுமதி கேட்டுப்பெற்று முழங்காலில் இருந்து செபித்தார். இயேசுவின் பாடுகளை வாய்விட்டுச் சொல்லி அழுதார். தம் உடலையும் ஆன்மாவையும் இறைவனுக்கே காணிக்கையாக்கி செபித்து எழுந்தார். காற்றாடி மலையில் ஓர் உயர்ந்த பாறையின்மேல் நிறுத்தப்பட்ட அவரை நோக்கி மூன்று துப்பாக்கிகள் குறி பார்த்தன. எத்தனையோ காலமாக மரணத்தை நோக்கி இழுத்தடிக்கப்பட்ட தேவசகாயம் இப்போது தம் கண்முன்னேயே மரணம் நிற்பது கண்டும் மனம் கலங்கவில்லை. தம் உடலையும், ஆன்மாவையும் இறைவனுக்குத் திருப்ப வேண்டிய கடன்பொருளாகக் கருதி அர்ப்பண உணர்வோடு நின்றார். வெடிச்சத்தத்தோடு மூன்று துப்பாக்கிக் குண்டுகளும் அவர் உடலில் இலக்கு மாறாமல் பாய்ந்தன. அந்நிலையிலும் அவரின் கடைசி வார்த்தைகள் கடவுளின் தயவை வேண்டுவதாகவே அமைந்தன. இன்னும் அவர் சாகவில்லை என்பதைப் புரிந்த பாதகர்கள் அவர் நெற்றிக்கு நேரே மேலும்இருமுறை சுட்டு அவர் உயிரைப் பறித்தனர்.

காற்றாடி மலையில் அவருடைய கடைசி நாள் அவர் விரும்பியபடியே விண்ணக வாழ்வுக்கான ஆரம்ப நாளாக அமைந்தது. மனமாற்றத்தோடு இயேசுவைப் பற்றிக்கொண்ட மாமனிதர் வரலாற்றின் இறுதிநாள் 14.01.1752.

**தி.ச. 1246.**

திருத்தூதர் மரபின்படி, பாஸ்கா மறை பொருள் கொண்டாடப்படும் ஞாயிறை அனைத்துலகத் திருச்சபையின் முதன்மையான கடன் திருநாளாகக் கடைப்பிடிக்கவேண்டும். அவ்வாறே, கீழ்க்கண்ட கடன் திருநாள்களையும் கடைப்பிடிக்கவேண்டும். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, திருக்காட்சி, விண்ணேற்றம், கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தம், இறைவனின் அன்னை புனித மரியா, அவருடைய அமலோற்பவம் மற்றும் விண்ணேற்பு, புனித யோசேப்பு, திருத்தூதர்களான புனித பேதுரு, பவுல், இறுதியாக அனைத்துப் புனிதர்கள்.

2) இருப்பினும், திருத்தூதரக ஆட்சிப்பீடத்தின் முன் அங்கீகாரத்துடன், ஆயர் பேரவை குறிப்பிட்ட சில கடன் திருநாள்களை நீக்கிவிடலாம். அல்லது ஒரு ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றிவிடலாம்.

**தி.ச. 1247.**

ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்றக் கடன் திருநாள்களிலும் விசுவாசிகள் திருப்பலியில் பங்கேற்கக் கடமைப்பட்டுள்ளனர், இறைவனுக்குச் செலுத்தவேண்டிய வழிபாட்டையோ, ஆண்டவரின் நாளுக்குரிய மகிழ்ச்சியையோ, உள்ளத்திற்கும் உடலுக்கும் உரித்தான ஓய்வையோ தடை செய்கிற வேலைகளையும் வாணிப நடவடிக்கைகளையும் அவர்கள் விலக்கவும் வேண்டும்.

**தி.ச. 1248.**

திருவிழாவன்றோ முந்தின நாள் மாலையிலோ எந்த இடத்திலும் கத்தோலிக்க வழிபாட்டு முறையில் கொண்டாடப்படும் திருப்பலியில் பங்கேற்பதால், திருப்பலியில் பங்கேற்க வேண்டிய கட்டளை நிறைவு செய்யப்படுகிறது.

2) திருப்பணியாளர் இல்லாததால் அல்லது வேறு ஒரு கனமான காரணத்தின் பொருட்டு நற்கருணைக் கொண்டாட்டத்தில் பங்கேற்க இயலவில்லையென்றால், பங்கு ஆலயத்திலோ வேறொரு புனித இடத்திலோ, மறைமாவட்ட ஆயரின் விதியமைப்புகளுக்கேற்பக் கொண்டாடும் இறைவார்த்தை வழிபாட்டில் விசுவாசிகள் பங்கேற்கும்படி, அல்லது தனியாக அல்லது குடும்பத்தில் வாய்ப்புக் கிடைக்கும்போது, பல குடும்பங்கள் சேர்ந்து உரிய நேரத்திற்கு இறைவேண்டலில் ஈடுபடும்படி மிகவும் பரிந்துரைக்கப்படுகிறது.

**புத்தாண்டு கொண்டாட்டங்கள்**

கத்தோலிக்க திருச்சபையில் புத்தாண்டு (ஜனவரி 1) ஒரு ஆன்மீகத் திருநாளாக மிக முக்கியத்துவத்துடன் கொண்டாடப்படுகிறது. இது சாதாரண வருட மாற்றமாக இல்லாது இறை நம்பிக்கை, நன்றி, அமைதி மற்றும் மரியா வழிபாடு ஆகியவற்றை மையமாகக் கொண்டது.

**1. இறைவனின் தாயாகிய தூயமரியா பெருவிழா ***

ஜனவரி 1ஆம் தேதி இறைவனின் தாயாகிய தூய மரியாள் பெருவிழா என்பதை இது உறுதிப்படுத்துகிறது. பல நாடுகளில் அது கடமைத்திருநாளாக (Holy ay of Obligation) ஆகும். தூய மரியாவின் மூலம் இறைவன் மனிதரிடையே வந்ததற்காக நன்றி செலுத்தப்படுகிறது.

**2. புத்தாண்டு திருப்பலி**

சிறப்பு புத்தாண்டு திருப்பலிகள் நடைபெறும். வாசகங்கள் பொதுவாக இறைவனின் ஆசீர்வாதமும் அமைதியும் (எண்ணாகமம்), இயேசுவின் பிறப்பும் பெயரிடலும், மரியா இதயத்தில் இறைச்செய்திகளை சிந்தித்தது, கடந்த ஆண்டிற்காக நன்றி கூறி புதிய ஆண்டிற்கு இறைவனின் வழிநடத்தலை வேண்டி ஜெபிக்கப்படுகிறது.

**3. உலக அமைதி நாள்**

ஜனவரி 1 உலக அமைதி நாளாகவும் அனுசரிக்கப்படுகிறது. திருத்தந்தை ஆண்டுதோறும் அமைதியை மையமாகக் கொண்ட செய்தியை வழங்குகிறார். திருச்சபைகளில் உலக அமைதிக்காக சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படுகின்றன.

**4. இயேசுவின் பெயரிடல் நிகழ்வு**

கிறிஸ்துமஸ் விழாவிற்கு எட்டு நாட்கள் கழித்து இயேசுவுக்கு பெயரிட்டப்பட்ட தினமாக அது நினைவு கூரப்படுகிறது. இயேசுவின் பெயரின் மகத்துவம் மற்றும் அவரது மீட்புப்பணியை இது நினைவூட்டுகிறது.

**5. ஜெபமும் ஆன்மீக சிந்தனையும்**

தனிப்பட்ட ஜெபம் மற்றும் நற்கருணை ஆராதனையில் ஈடுபடுவது, குடும்பம், வேலை, எதிர்கால முடிவுகளுக்காக இறைவனின் ஆசீர்வாதம் கேட்பது, சாதாரண தீர்மானங்களை விட ஆன்மீக தீர்மானங்கள் எடுப்பது.

**6. பண்பாட்டு மரபுகள் பல்வேறு இடங்களில்**

புத்தாண்டு முன்னிரவில் (டிசம்பர் 31) நன்றி திருப்பலி, குடும்ப ஆசீர்வாதம், திருச்சபையில் அமைதி வேண்டி சிறப்பு ஜெபங்கள்.

திரு. **ராஜா**
யோவான் அன்பியம்



## புனித வின்செந்திய சபையின் செயல்பாடுகள்

'மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்' (மத். 25 : 40)

**மாதாந்திர உதவிகள்**

8 தத்துக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவி தொகை ரூ.11,000
ஒட்டியம்பாக்கம் கிளைச் சபைக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவி தொகை ரூ. 2000/-

**மருத்துவ உதவிகள்**

28-09-2025 அன்று வயிற்று வலியால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப்பெற்ற தத்து குடும்ப உறுப்பினருக்கு மருத்துவ செலவிற்காக ரூ.3000/- அவரது இல்லத்திற்கு சென்று வழங்கப்பட்டது.

பித்தப்பையிலுள்ள கல்லை அகற்றுவதற்கு அறுவைசிகிச்சை செய்வதற்காக ஒருவருக்கு 06-10-25 அன்று மருத்துவ உதவியாக ரூ.5000 வழங்கப்பட்டது.

20-12-25 அன்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்த தத்துக் குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு மருத்துவ உதவியாக ரூ.3000/- வழங்கப்பட்டது.

**உத்தரிக்கும் ஆன்மாக்களின் நித்திய இளைப்பாற்றிக்காக நடைபெற்ற இரத்ததான முகாம்.**

16-11-2025 அன்று அரசு மருத்துவமனையின் இரத்த வங்கியுடன் இணைந்து நமது பங்கு மண்டபத்தில் காலை 9.30 மணிமுதல் மதியம் 1.30 மணி வரை இரத்த தான முகாம் நடைபெற்றது. உத்தரிக்கும் ஸ்தலத்தில் வேதனையுறும் நமது குடும்பத்தில் மரித்தவர்கள் நமது பங்கில் மரித்தவர்கள் யாருமே நினையாத ஆன்மாக்களின் நித்திய இளைப்பாற்றிக்காக சிறு ஒறுத்தல் முயற்சியாக இந்த இரத்த தான முகாம் நடைபெற்றது.

45 பேர் இரத்தத்தை தானமாக வழங்க முன்வந்தனர். அதில் 34 பேர் தகுதிபெற்று தங்கள் இரத்தத்தை தானம் செய்தனர். இரத்தானம் வழங்கிய ஒவ்வொருவருக்கும் சபையின் செயல்பாடுகள் பற்றிய புத்தகம், செவ்வாழை பழம், பிஸ்கட் வழங்கப்பட்டது. அரசு இரத்த வங்கி சார்பாக சான்றிதழ் வழங்கப்பட்டது. இரத்ததானம் வழங்கிய அனைவருடைய ஆன்ம சரீர நலன்களுக்காக 23-11-25 அன்று திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இந்த முகாம் நடைபெறுவதற்கான மொத்த செலவு ரூ.5600/-

**ஆன்மீக உதவிகள்**

திருப்பலியில் கலந்துக்கொள்ள முடியாத நிலையில் முதுமையினாலும். நோயினாலும் அவதியுறும் மூன்று முதியவர்களுக்கு நமது பங்குத்தந்தையிடம் தெரிவிக்கப்பட்டு அவர்களின் இல்லத்தில் நற்கருணை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

**வேடந்தாங்கல் கிராம மக்களுடன் கிறிஸ்து பிறப்பு விழா**

21-12-2025 அன்று ஞாயிற்றுகிழமை நமது சபையிலிருந்து 19 உறுப்பினர்கள் மாலை 4.00 மணியளவில் வேடந்தாங்கல் திரு இருதய ஆண்டவர் ஆலயத்தை சென்றடைந்தோம். வேடந்தாங்கல் பங்கில் உள்ள கிளைப்பங்குகளான சாத்தமை (18 குடும்பங்கள்), துறையூர் (10 குடும்பங்கள்), புதுப்பட்டு(10 குடும்பங்கள்) விநாயக நல்லூர் (12 குடும்பங்கள்) என மொத்தமாக 50 குடும்பங்களுக்கு மளிகை பொருட்கள், பெட்ஷீட், கேக், கிறிஸ்து அரசர் படம், அமலோற்பவ மாதாவின் அற்புத பதக்கம் வழங்கப்பட்டது. கிராம மக்கள் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு செய்தி வழங்கப்பட்டது. விவிலியத்திலிருந்து கேள்விகள் கேட்டு பதில் சொன்னவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. கிறிஸ்து பிறப்பு பாடல்கள் பாடி கிராம மக்கள் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டது. வேடந்தாங்கல் பங்குத்தந்தை அருட்பணி ஜெயராஜ் நமது பங்குத்தந்தைக்கும், உறுப்பினர்களுக்கும், உபகாரிகளுக்கும் நன்றி தெரிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

**தத்து குடும்பங்களுடன் கிறிஸ்து பிறப்பு விழா**

நமது பங்கிலுள்ள தத்து குடும்பங்கள், பிற ஏழை குடும்பங்கள், மற்றும் ஆலய பணியாளர்கள் என மொத்தம் 25 குடும்பங்களுக்கு 22-12-25, திங்கட்கிழமை மாலை 5.00 மணியளவில் நமது பங்குதந்தையின் முன்னிலையில் மளிகைப்பொருட்கள், புத்தாடைகள் கேக் வழங்கப்பட்டது. ஆலயம் வரமுடியாத முதியவர்களுக்கு நோயாளிகளுக்கு நமது வின்சென்ட் தே பவுல் சபை இளையோர்கள் நேரடியாக இல்லத்திற்கு சென்று உதவி பொருட்களை வழங்கினார்கள். கிறிஸ்துமஸ் உதவிகளுக்கான மொத்த செலவு ரூ.1,29,885, பயனடைந்த குடும்பங்கள் 75. இதற்கு தாராளமாக உதவிய நமது பங்குதந்தைக்கும், உபகாரிகளுக்கும், பங்கு மக்களுக்கும் எமது சபை சார்பாக நன்றிகளும் செபங்களும்.

**இதர நிகழ்வுகள்**

21-11-25 அன்று சித்தாலப்பாக்கம் புனித அந்தோணியார் ஆலயத்தில் நடைபெற்ற புனித வின்சென்ட் தே பவுல் கிளைச்சபையின் ஆண்டு விழாவிலும் 07-12-25 அன்று ஒட்டியம்பாக்கம், கிளைச் சபையின் ஆண்டு விழாவிலும் நமது சபை உறுப்பினர்கள் கலந்துக்கொண்டு அச்சபை உறுப்பினர்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

## வளன் ஒளி - 9ம் இதழில் வெளியான வினா விடை போட்டியில் பங்கு பெற்றவர்கள் விவரம்

| வ. எண் | பரிசு பெற்றவர் பெயர் | அன்பியம் |
|---|---|---|
| | முதல் நிலை | |
| 1 | அல்போன்சா குணசீலி | புனித அன்னை தெரேசா |
| 2 | ஜேம்ஸ் சேவியர் லொயோலா | புனித சின்னப்பர் |
| 3 | சகாய மேரி ரூபர்ட் | புனித ஃபிரான்சிஸ் சேவியர் |
| 4 | ஷோபனா ஜோசப். J | புனித அன்னை தெரேசா |
| 5 | மேரி ஸ்டெல்லா. A | புனித பேட்ரிக் |
| 6 | திவ்யா. D | புனித சின்னப்பர் |
| | இரண்டாம் நிலை | |
| 7 | அமலி. K | புனித இரண்டாம் ஜான்பால் |
| 8 | லதா மேரி. D | புனித தோமையார் |
| 9 | மேரி ஜெசிந்தா | புனித அந்தோணியார் |
| 10 | ராஜகுமாரி ஜோசப் விக்டர் | புனித அந்தோணியார் |

| வ. எண் | பரிசு பெற்றவர் பெயர் | அன்பியம் |
|---|---|---|
| | மூன்றாம் நிலை | |
| 11 | ஜூலியா லில்லி புஷ்பம். S | புனித பேதுரு |
| 12 | சோஃபியா. L | புனித இன்னாசியார் |
| 13 | டெய்சி இனிகோ பாரதி | புனித சூசையப்பர் |
| 14 | மரியா ஆனந்த் | புனித மத்தேயு |
| 15 | எட்வின். M.S. | புனித இரண்டாம் ஜான்பால் |
| 16 | எலிசபெத் ராணி. S.A. | புனித யோவான் |
| 17 | ஸ்டெபினா. L | புனித அமல அன்னை |
| 18 | ஜோஸ்பின் | புனித பேதுரு |

| | போட்டியில் பங்கு பெற்ற மற்றவர்கள் | | | | |
